பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

மகாத்மா காந்தியடிகளின் வாரப் பத்திரிகை

42 ] சென்னை—ஞாயிறு, ஜனவரி 26, 1947. [ விலை. அணா. 2

## நான் புத்தர் அல்லன்

காந்தியடிகள் ஜனவரி 15-ம் தேதி நாராயண்பூர் கிராமத்தில் பிரார்த்தனை நடத்திய பொழுது முஸ்லிம் நண்பர் ஒருவர் "தாங்கள் அஹிம்ஸா தர்மத்தைப் போதித்து வருகிறீர்கள். தங்களை புத்தர் என்றே கூறலாம். அப்படி யிருந்தும் தாங்கள் நாட்டில் காணப்படும் சச்சரவுகளையும் ரத்தவெறியையும் தடுக்காதிருக்கிறீர்களே" என்று கேட்டார். அதற்கு காந்தியடிகள் கூறிய பதிலாவது :—

"என்னை புத்தர் என்று கூறுவதை நான் ஒப்புக் கொள்ள முடியாது. நான் ஒரு சாதாரண மனிதனே யாவேன். எனக்கு அதிகமான அனுபவம் உண்டென்பது உண்மைதான். ஆனால் இந்தச் சபையில் உள்ளவர்களை விட உயர்ந்தவனென்று நான் சொல்லிக் கொள்ள மாட்டேன். நான் இந்தியாவிலுள்ள எல்லா வகுப்பாருடைய ஊழியனாவேன். வகுப்புகளுக்கிடையே ஏற்பட்டிருக்கும் சச்சரவுகளையும் ரத்த வெறியையும் தடுப்பதற்கு வேண்டிய ஆற்றல் எனக்கு வேண்டுமென்றே விரும்புகிறேன். புத்தரும், அவருக்குப் பின் வந்த தீர்க்கதரிசிகளும் யுத்தங்களைத் தடுத்து நிறுத்தியது உண்மைதான். ஆனால் என்னால் அப்படி நிறுத்த முடியவில்லை. அதிலிருந்தே நான் சாதாரண மனிதன்தான், எனக்கு விசேஷ ஆற்றல் கிடையாது என்பது விளங்குகிறதல்லவா? நான் அஹிம்ஸா தர்மத்தை மேற் கொண்டிருப்பது உண்மைதான். என்னுடைய அஹிம்ஸா தர்மத்தின் ஆற்றலை சோதித்தறிவதற்காகவே நான் நவகாளிக்கு வந்திருக்கிறேன். இரண்டு சமூகத்தாரும் உடன் பிறந்தவர்களைப் போல ஒன்று சேர்ந்து சமாதானமாக வாழ்வோம் என்று நடை முறையில் செய்து காட்டும் வரை நான் வங்காளத்தை விட்டுப் போகப் போவதில்லை."

## போக்கிரிகள் செயல் அல்ல

காந்தியடிகள் ஜனவரி 17-ம் தேதி ராம்தேவ்பூர் கிராமம் போய்ச் சேர்ந்தார். அங்கே அவர் திரு. தேவேந்திர குமாரநாத் என்பவருடைய அதிதியாக இருந்தார். திரு. தேவேந்திரநாத் அதற்கு ஒருவாரத்திற்கு முன்தான் நூல் நூற்க ஆரம்பித்தார். அவர் ஒரு நெசவுக்காரர். அந்த ஒரு வாரத்தில் நூற்ற நூலைக் கொண்டு 5 முழ நீளம், 1¾ முழம் அகலம் உள்ள ஒரு வேஷ்டி நெய்து, காந்தி அடிகளிடம் காணிக்கையாக சமர்ப்பித்தார். காந்தியடிகள் அந்த நீளம் அந்த அகலமுள்ள வேஷ்டிதான் உடுத்துகிறார். ஆனால் அவர் அதை வைத்துக் கொள்ளாமல் திரு. தேவேந்திரநாத்திடமே திருப்பிக் கொடுத்து "நீர் இனிமேல் நூலுக்காக சர்க்காரை எதிர்பார்த்துக் கொண்டிராமல் நீரே உமக்கு வேண்டிய நூலை நூற்றுக் கொள்ள வேண்டும். அதை ஞாபகப் படுத்துவதற்காக இந்த வேஷ்டி உம்மிடமே இருக்கட்டும்" என்று சொன்னார்.

சில முஸ்லிம் நண்பர்கள் நவகாளி நிலைமையைக் குறித்து காந்தியடிகளிடம் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கூறியதாவது :—

"சென்ற வருஷம் அக்டோபர் மாதத்தில் பாடா நகரிலுள்ள பாடா கம்பெனியில் வேலை பார்ப்பவர்களில் அநேகர் நவகாளிக்கு வந்து கலகம் செய்யும்படி தூண்டி விட்டார்கள். அக்டோபரில் நடந்ததிற்குப் பிறகு, அட்டூழியங்கள் நடைபெற வில்லை. முஸ்லிம்கள் பலரைக் கைது செய்ய வேண்டுமென்று கிளர்ச்சி செய்ததுதான் இரண்டு சமூகத்தாருக்கிடையிலும் ஒற்றுமை ஏற்படுத்துவதற்குத் தடையாயிருக்கிறது."

காந்தியடிகள் இது சம்பந்தமாக பிரார்த்தனைக் கூட்டத்தில் கூறியதாவது :—

ஹிந்துக்கள் அநாவசியமாக முஸ்லிம்கள் மீது குறை கூறுவதை நான் விரும்பவில்லை. ஆனால் அட்டூழியங்கள் செய்தவர்களை கைது செய்யாமலும், அட்டூழியங்கள் செய்தவர்கள் உண்மையை ஒப்புக் கொள்ள வேண்டு மென்று முஸ்லிம்கள் வற்புறுத்தாமலும், இருக்கும் வரை நான் ஹிந்துக்களிடம் அனுதாபம் கொள்ளாமல் இருக்க முடியாது. அக்கிரமம் செய்தவர்கள் பச்சாதாபப்பட்டு கொள்ளையடித்த பொருள்களைத் திருப்பிக் கொடுத்து விட வேண்டும். அத்துடன் இனிமேல் ரத்த வெறிக் காரியங்கள் எதுவும், நடைபெற மாட்டாது என்று தெளிவாக ஹிந்துக்கள் மனதில்படும்படி செய்யவும் வேண்டும். முஸ்லிம்கள் ஹிந்துக்களுடைய உயிருக்கும் பொருளுக்கும் பரிபூரணமான பாதுகாவல் அளிப்பதாக உறுதி கூற வேண்டும். போக்கிரிகள் தான் அட்டூழியங்களைச் செய்தார்கள் என்று கூறுவது தவறு. போக்கிரித்தனத்தையே தொழிலாகக் கொண்டவர்கள் ஒரு நாளும் இத்தகைய இரத்தவெறிக் காரியங்களைச் செய்ய முடியாது. வெறியில் செய்யும் காரியங்களெல்லாம் எல்லா ஜனங்களாலும் செய்யப்படும் காரியங்களாகவே எண்ண வேண்டும். முஸ்லிம்கள் அக்கிரமம் செய்தவர்களை கோர்ட்டுகளில் கொண்டுபோய் நிறுத்த வேண்டுமென்று நான் விரும்பவில்லை. பொதுஜன அபிப்பிராயம் என்னும் கோர்ட்டில் நிறுத்தி விசாரித்தால் போதும். சர்க்கார் கோர்ட்டில் விசாரணை செய்வதைவிட பொதுஜன அபிப்பிராய கோர்ட்டில் விஜாரணை செய்வது எத்தனையோ மடங்கு விசேஷமாகும். நாம் விரும்புவது அக்கிரமம் செய்தவர்களைப் பழி வாங்குவதன்று. சீர்திருத்த வேண்டுமென்பதே யாகும்."

## ஹிந்துப் பெண்களுக்குப் புத்திமதி

காந்தியடிகள் ஜனவரி 17 ம் தேதி காலையில் பார்கோட்டு என்னும் கிராமம் போய்ச் சேர்ந்தார். போகும் வழியில் ஒரு சிறிய குடியிருப்பில் அங்குள்ள பெண்கள் அவரை சங்கநாதத்தோடு வர

வேற்று சந்தணம் புஷ்பம் முதலியவைகளை பாதத்தில் வைத்து அவரை வணங்கினர்கள்.

காந்தியடிகள் மாலையில் நடந்த பெண்கள் கூட்டத்தில் கீழ்க்கண்டவாறு கூறினர் :—

''நவகாளியில் நடந்தவை கடவுளுடைய சாபமாகும். அது வங்காளத்தை மட்டும் சேர்ந்ததென்று எண்ண வேண்டாம். இந்தியா முழுவதையும் பாதிப்பதாகும். நாம் நம்முடைய மனோபாவத்தை மாற்றிக் கொள்ளவேண்டிய காலம் வந்திருக்கிறது. ஹிந்துப் பெண்கள் உயர்வு தாழ்வென்று ஜாதி வித்தியாஸம் பாராட்டுவதை விட்டுவிடவேண்டும். எல்லாப் பெண்களையும் சமமாக எண்ணிப் பழகவேண்டும். அதிலும் விசேஷமாக ஹிந்துப் பெண்கள் தங்கள் முஸ்லிம் சகோதரிகளுடன் சௌஜன்யமாகப் பழக வேண்டும். இரண்டு சமூகங்களையும் சேர்ந்த பெண்கள் நண்பர்களாக நெருங்கி பழகுவார்களானல் நவகாளியில் நடந்த அட்டூழியங்கள் நடந்திருக்க மாட்டா.

கிராமத்திலுள்ள பெண்கள் தங்கள் ஓய்வு நேரத்தை வீணுக்காமல் நூல் நூற்றல், கிராமத்தையும் கிராமக் குளத்தையும் சுத்தமாக வைத்துக்கொள்ளுதல் போன்ற காரியங்களைச் செய்துவர வேண்டும். பெண்களைப் போலவே ஆண்களும் முஸ்லிம்களிடம் நண்பர்களாக நெருங்கிப் பழகவேண்டும். அப்படிச் செய்தால் சச்சரவுகள் ஏற்படமாட்டா''

## எதன் சோதனை ?

காந்தியடிகள் ஜனவரி 18ம் தேதி காலை பார்க்கோட் கிராமத்திற்கு நடந்து சென்றர். போகும் வழியில் அவருக்கு திரு மகமத்பையா என்னும் முஸ்லிம் கனவான் ஒருவரை அறிமுகம் செய்து வைத்தார்கள். அவர்தான் அந்த இரண்டு கிராமங்களுக்கு மிடையில் மகாத்மா காந்தியடிகள் நடக்கவேண்டிய பாதை முழுவதையும் சுத்தம் செய்து பண்படுத்தியிருந்தார். காந்தியடிகள் "உங்களை கடவுள் ஆசிர்வதிப்பார்" என்று அவரிடம் கூறினர்.

அதன்பிறகு காந்தியடிகள் நடந்து போகும்பொழுது தம்முடன் வந்த பத்திரிகை நிருபர்களிடம் கீழ்க் கண்டவாறு கூறினர்:—"இங்கே நான்செய்ய மேற்கொண்டுள்ள காரியம் நிறைவேருமல் போகுமானல் அது என்னுடைய அஹிம்ஸையின் தோல்வியாக இருக்குமேயன்றி உன்னதமான அஹிம்ஸா தர்மத்தின் தோல்வியாக இருக்கமாட்டாது. நான் இங்கே பரிசோதித்துக்கொண் டிருப்பதெல்லாம் என்னுடைய அஹிம்ஸையைத்தான்."

## பாகிஸ்தானும் ஒழுக்கமும்

காந்தியடிகள் 18ம் தேதி மாலை பதல்கோட்டில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் கீழ்க்கண்டவாறு பேசினர் :—

''சில தினங்களுக்கு முன் ஜின்ன சாகிபின் தங்கை பாதிமா ஜின்ன கராச்சியில் ஒரு பெண்கள் பாடசாலை கட்டடத்திற்கு அஸ்திவார விழா நடத்தினர். அப்பொழுது ஜின்ன சாகிப் பேசிய பிரசங்கத்தின் சாரம் யாதெனில் முஸ்லிம்கள் தங்களிடம் பொறுப்பு உணர்ச்சியையும் நியாய உணர்ச்சியையும் அதிகமாக பெருக்கிக்கொள்ள வேண்டுமென்பதும் ஒருவர் தீங்கு செய்தால் அதைப்பார்த்து தீங்கு செய்யக் கூடாதென்பதும் செய்யப்போகும் காரியம் தவறென்று மனசாக்ஷி கூறுமானல் எந்த நன்மையையும் உத்தேசித்து அதைச் செய்ய ஆரம்பித்துவிடக் கூடாது என்பதுயேயாகும்.

ஜின்ன சாகிப் கூறும் இந்த யோசனைப்படி முஸ்லீம்கள் நடந்தால் அவர்கள் பாகிஸ்தான் பெறுவதை யாராலும் தடுத்து விடமுடியாது. பலாத்காரத்தை உபயோகிக்காமல் ஒழுக்கத்தை உபயோகித்தே பாகிஸ்தானை அமைப்பதாயிருந்தால் அதை எல்லோரும் வரவேற்கவே செய்வார்கள். அதை எந்தப் பெயரைக் கொண்டு அழைத்தாலும் அதற்காக ஆக்ஷேபணை கூறமாட்டார்கள். ஆனல் எங்கே நடந்தாலும் கொள்ளையையும் தீ வைப்பதையும் பலாத்காரமாக மதமாற்றம் செய்வதையும் மனிதனுடைய விழித்தெழுந்த மனசாக்ஷி ஒரு நாளும் ஒப்புக்கொள்ள மாட்டாது.''

## எத்தகைய கல்வி வேண்டும் ?

ஜின்ன சாகிப் ஸிந்து மாகாணத்தில் ஜனங்களிடம் காணப்படும் எழுத்தறிவின்மையை விரட்டி அடிப்பதற்கு வேண்டிய காரியங்களை முழுமூச்சாகச் செய்ய வேண்டுமென்று அங்குள்ள கல்வி மந்திரிக்கு யோசனை கூறி இருக்கிருர். அதைக் குறித்து காந்தியடிகள் பதல்கோட் பிரார்த்தனைக் கூட்டத்தில் கீழ்க் கண்டவாறு கூறினர்:—

''ஜின்ன சாகிப் கூறுகிறபடி செய்ய வேண்டியது அவசியமாகும். இனி வருங்காலத்தில் ஒற்றுமையும் சமாதானமும் உண்டாக்குவதற்கு அதுவே வழியாகும். ஆனல் புஸ்தகப்படிப்பு மட்டும் போதாது. புஸ்தகப் படிப்புப் படித்தவர்களுக்கு குறைவில்லை. ஆனல் மனிதனை மனிதனுகச் செய்வது புஸ்தகப் படிப்பன்று. எல்லா விஷயங்களையும் தெரியக் கூடிய பாண்டித்தியம் பெற்றிருக்கலாம். ஆனல் மற்றவர்களுடன் நண்பர்களாகவும், சகோதரர்களாகவும் வாழக் கூடிய வித்தையைக்கற்றுக் கொள்ளா விட்டால் பாண்டித்தியம் பெறுவதால் மட்டும் என்ன பயனுண்டாகும்? சரியான முறையில் வாழ்வதற்கு கற்றுக் கொடுக்கும் கல்வியே நமக்குத் தேவையான கல்வியாகும். ஆணும் பெண்ணும் சமூகமாகிய உடலில் இரண்டு உறுப்புக்கள் ஆவர். ஒன்றை வளர்த்து ஒன்றை வளர்க்காதிருந்து விட்டால் உடல் முழுவதும் பாதிக்கப்படும். ஆகலால் ஜனத்தொகையில் பாதியாக உள்ள பெண்களையும் அறியாமை விலங்கிலிருந்தும் மூடவழக்கங்கள் ஆகிய விலங்கிலிருந்தும் விடுவிக்க வேண்டியது அவசியமாகும்.''

## உங்களால்தான் முடியும்

காந்தியடிகள் பதல்கோட்டிற்குப் போகும் வழியில் ஒரு முஸ்லீம் நண்பர் வீட்டில் சிறிது நேரம் தங்கி இருந்தார். அப்பொழுது அந்த முஸ்லீம் நண்பர் அவரிடம் "தாங்களும் ஜின்ன சாகிபும் கலந்து பேசி ஒரு ஏற்பாடு செய்வீர்களானல் நம்முடைய நாட்டில் சச்சரவுகள் நின்று சமாதானம் உண்டாகிவிடும்'' என்று கூறினர். அதைக்குறித்து காந்தியடிகள் பிரார்த்தனைக் கூட்டத்தில் கூறியதாவது:—

''நான் ஜின்ன சாகிபை பல முறைச் சந்தித்துப்பேசி இருக்கிறேன். அது உங்களுக்குத் தெரியும். சந்தித்த பொழுதெல்லாம் நாங்கள் நண்பர்களாகவே பேசினேம். ஆயினும் எவ்வித பயனும் உண்டாகவில்லை.

தலைவர் என்பவரை அவரைப் பின்பற்றுகிறவர்கள் தான் சிருஷ்டி செய்கிருர்கள். அவர்களிடம் அடங்கிக் கிடக்கும் அபிலாஷைகளை அவர் தெளிவாக எடுத்துக் கூறுகிருர். அவ்வளவு தான். இந்தியாவில் மட்டுமின்றி உலக முழுவதிலும் காணப்படுவது இது தான். ஆதலால் நான் ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் கூறும் யோசனை யாதெனில் அவர்கள் தங்களுக்கு தினசரி வாழ்க்கையில் வழிகாட்டுவதற்கு முஸ்லீம் லீக்கையோ காங்கிரஸையோ, ஹிந்து மகா சபையையோ, எதிர்பார்த்து நிற்கக்கூடாது என்பதே யாகும். அவர்கள் தங்களையே நம்பி வாழ

உண்மை வளர்ந்திடாமல் ஒழுக்கம் உயர்ந்திடாமல் உண்டோ சுதந்திரம் ?—நாமக்கல் கவிஞர்

வேண்டும். அப்படிச் செய்தால் சாமாதானமாக வாழவேண்டுமென்ற அவர்களுடைய ஆசையையே தலைவர்களும் மேற்கொள்வார்கள். அரசியல் ஸ்தாபனங்களை அரசியல் விஷயங்களை மட்டும் கவனித்துக் கொள்ளும்படி விட்டு விடவேண்டும். யாருக்கேனும் நோயுண்டானால் என்ன செய்ய வேண்டுமென்று நாம் காங்கிரஸிடமோ லீகிடமோ ஓடுகிறோமா? இல்லையே. அதைக் கனவில்கூட நினைக்க மாட்டோமல்லவா? ஆதலால் நீங்கள் சச்சரவில்லாமல் சமாதானமாக வாழ்வதற்கு நீங்கள் தான் அடிகோல வேண்டும். எங்களை எதிர்ப்பார்க்கக் கூடாது.

பிறர்க்கு பெரிய தீங்குகளைச் செய்து விட்டால் உடனே அதற்காக மனம் வருந்தி கடவுளிடம் மன்னிப்பு வேண்டிக்கொள்ள வேண்டும். கடவுள் மன்னிப்பு அளித்தால் நல்லதேயாகும். மன்னிப்பு அளிக்காவிட்டால் கடவுளை நம்பி வாழ்பவருக்கு எவ்வித தீமையும் உண்டாகாது. கடவுள் கொடுக்கும் தண்டனையைச் சந்தோஷமாக எற்றுக்கொண்டால் அது நம்முடைய ஆன்மாவை உன்னத நிலை அடையும்படி செய்யும். நான் மகமது நபியின் மணிவாசகங்கள் அடங்கிய நூலைப் படித்திருக்கிறேன். அதில் அவர், தவறு செய்தால் உடனே அதைத் திருத்தவேண்டுமென்றும், இல்லா விட்டால் இறுதி நாளில் கடவுள் விசாரித்துத் தண்டிப்பார் என்றும் கூறுகிறார். இதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு, நீங்கள் நடக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்."

## தொண்டர்களுக்கு புத்திமதி

காந்தியடிகள் ஜனவரி 19-தேதி பதல்கோட் கிராமத்திலிருந்து அட்டகோரா கிராமத்திற்குப் போய்ச் சேர்ந்தார். அங்கே பிற்பகலில் கிராம சேவா சங்கத்தைச் சேர்ந்த 42-தொண்டர்கள், காந்தியடிகளிடம் வந்து தங்களுக்குப் புத்திமதி கூறும் படியாக வேண்டிக் கொண்டார்கள். அவர்களிடம் காந்தியடிகள் கூறியதாவது :—

"யாரேனும் வாளோ, தடியோ கொண்டு தாக்க வந்தால் நாமும் வாளோ, தடியோ கொண்டு தாக்க முடியும். ஆனல், எவ்வித பலனும் உண்டாகாது. தடியைக் கொண்டோ, வாளைக் கொண்டோ யாரையும் வெல்ல முடியாது. அன்பைக் கொண்டுதான் வெல்ல முடியும். நீங்கள் அஹிம்சையை விட்டு நழுவக்கூடாது. அச்சத்திற்கு இடங்கொடுக்கக் கூடாது. நீங்கள் ஒவ்வொருவரும் பயத்தை விட்டு விடுவீர்களானல், நீங்கள் 42-போராக இருந்தாலும், உங்களுக்கு 4200-பேருடைய பலம் உண்டாகிவிடும்."

அதன் பின் காந்தியடிகள் நீங்கள் பயத்தை விட்டு விட்டீர்களா என்று தொண்டர்களிடம் கேட்டார். அவர்களில் ஒருவர் "நாங்கள் எல்லோரும் ஒன்றுக இருக்கும் பொழுது தான் எங்களுக்குப் பயம் தோன்ற வில்லை" என்று கூறினர். அதற்கு காந்தியடிகள் கூறியதாவது :—

"அப்படியானல் உங்கள் எல்லோருக்கும் பயமிருப்பதாகவே தெரிகிறது. ஆனல் தொண்டர்கள் தனித்தனியாக இருந்தாலும் பயமில்லாதவர்களாகவே இருக்க வேண்டும். என்ன நேர்ந்தபோதிலும் அடிபணியாதிருக்க வேண்டும். பயத்துக்கும் மானமங்கத்துக்கும் இடம் கொடுத்தலாகாது. நீங்கள் கிராமத்தாருக்கு வேண்டிய நன்மையான காரியங்களில் ஈடுபடவேண்டும். முஸ்லிம்களுடன் நண்பர்களாகவும் சகோதரர்களாகவும் வாழ வேண்டும். யாரையும் அன்பினல் வெல்ல முயல வேண்டும்."

இறுதியில் தங்களை ஆசீர் வதிக்குமாறு தொண்டர்கள் காந்தியடிகளிடம் கேட்டுக் கொண்டார்கள். அதற்கு காந்தியடிகள் "சந்தோஷமாக உங்களுக்கு என்னுடைய ஆசீர்வாதங்களை அளிக்கின்றேன். ஆனல் நீங்கள் என்னுடைய புத்திமதிப்படி நடந்தால் தான் என்னுடைய ஆசீர்வாதங்கள் உங்களுக்குக் கிடைக்கும்." என்று கூறினர்.

## வந்தே மாதரம்

காந்தியடிகள் ஜனவரி மாதம் 20-தேதி காலையில் அட்டகோரா கிராமத்திலிருந்து சிரோந்தி என்னும் கிராமத்திற்கு நடந்து சென்ற பொழுது, அவருடன் சென்றவர்கள் ராம்துன் பஜனை செய்து கொண்டும், வந்தே மாதரம் அல்லாஹோ அக்பர் என்று கோஷித்துக் கொண்டும் போனர்கள்.

அப்படிப் போகும் வழியில் ஒரு முஸ்லிம் இளைஞர் வந்து வந்தே மாதரமென்று முஸ்லிம்கள் கோஷிக்க முடியாதென்று கூறினர். அதற்கு காந்தியடிகள் கூறியதாவது :—

வந்தே மாதரம் என்றும், அல்லாஹு அக்பர் என்றும் எக காலத்தில் கோஷிப்பதால் யாருடைய மத உணர்ச்சியையும் புண்படுத்துவது ஆகாது. ஒவ்வொருவரும் வந்தே மாதரமென்றும் அல்லாஹு அக்பர் என்றும் கோஷித்தால் நாம் அதி சீக்கிரத்தில் சுதந்திரத்தை அடைந்து விடுவோம்."

## ரோமன் லிபி

ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சண்டையிட்டுக் கொண்டிருப்பதால் நாகரி லிபியும் உருது லிபியும் போய் ரோமன் லிபி வந்து விடக் கூடும் என்றும் காலா காலத்தில் எச்சரிக்கையாயிருக்கவேண்டுமென்றும் நண்பர் ஒருவர் எனக்குக் கடிதம் எழுதி இருக்கிறார்.

உலகமெங்கும் ரோமன் லிபியை உபயோகிக்க வேண்டுமென்று கூறுகிறவர்கள் இருக்கிறார்கள். ஆனல் அப்படிரோமன்லிபியை எற்றுகொள்ளும்படி எற்பட்டு விட்டால் அது மனித ஜாதிக்கு எற்படக் கூடிய மகத்தான அனர்த்தங்களில் ஒன்ருகுமென்றே எனக்குத் தோன்றுகிறது.

சில விஷயங்கள் சமயோசிதமாக இருக்கலாம். ஆனல் அவைகள் மனிதர்களுக்குள் ஒற்றுமையை குலைத்து விடுமானல் அது பைத்தியக்காரத்தனமாகவே ஆகும். விஞ்ஞான ரீதியாகப் பார்த்தால் நாகரி லிபியில் எவ்வித குறையும் கண்டுபிடிக்க முடியாது. உருது லிபி பார்க்க அழகாக இருக்கிறது. ஆனல் சோம்பலின் காரணமாக எற்பட்டு வரும் ரோமலிபி மோகத்தைத் தடுக்க வேண்டும். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தங்களிடையேயுள்ள துவேஷத்தால் இரண்டு இந்திய லிபிகளையும் இழந்துவிடக் கூடிய அளவு அறிவை இழந்து விடமாட்டார்கள் என்று நம்புகிறேன். எல்லோரும் இரண்டு லிபிகளையும் கற்று இந்திய தேசீய பாஷையாகிய ஹிந்துஸ்தானியை ஹந்துவையும் உருதுவையும் இணைத்து உருவாக்கி வளமுடையதாகச் செய்யவேண்டும். மாகாண சர்க்கார்கள் ரோம லிபியின் மோகவலையில் விழுந்து விடலாகாது. இந்தியா தேசம் நாகரீகத்தின் "மையொத்துதாள்" (அதாவது தானக சிந்தித்துப் பார்க்காமல் பிறர் நடப்பது போல் நடக்கக் கற்றுக் கொள்ளும் நாடு) என்று எல்லோரும் இழிவாகக் கருதும்படியாக நடந்து கொள்ளலாகாது.

கேத்தூரி — 21-1-47 — மோ. க. காந்தி.

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: பொ. திருகூட ஸுந்தரம், நாமக்கல் கவிஞர்

ஜனவரி 26, ஞாயிறு 1947


## நான் நடந்து போவதின் நோக்கம்

காந்தியடிகள் ஜனவரி 6-ம் தேதி மௌன தினமாகையால் அன்று மாலை பிரார்த்தனைக் கூட்டத்தில் பேச வேண்டிய விஷயத்தை எழுதிக் கொடுத்தார். அந்த பிரசங்கம் வருமாறு :—

"என்னுடைய மௌன விரதம் இரவு 7-மணி வரை நீடித்திருக்கு மாகையால் நான் கூற விரும்புவதை எழுதிக் கொடுத்திருக்கிறேன்.

நேற்று முதல் கால் நடையாகச் செல்லும் என் பிரயாணத்தைச் செய்ய ஆரம்பித்திருக்கிறேன். அது இடையில் தடைப் படாமல் இறுதிவரை நடக்க வேண்டு மென்றும் அதன் நோக்கம், நிறைவேற வேண்டு மென்றும் நான் கடவுளிடம் பிரார்த்தித்துக் கொள்ளுகின்றேன். நீங்களும் பிரார்த்திக்கவேண்டு மென்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஆனால் பிரார்த்திப்பதற்கு முன்னால் நீங்கள் அந்த நோக்கத்தை அறிந்து கொள்ளுதல் அவசியமாகும். நான் நடக்க ஆரம்பித்ததற்கு ஒரே ஒரு நோக்கம் தான். அதுவும் தெளிவானதே யாகும். அது யாதெனில், கடவுள் ஹிந்துக்களுடைய ஹிருதயத்தையும் முஸ்லிம்களுடைய ஹிருதயத்தையும் சுத்தமாக்க வேண்டு மென்பதும் இரண்டு சமூகத்தாரும் பரஸ்பரம் பயத்தையும் சந்தேகத்தையும் விட்டுவிட வேண்டும் என்பதுமே யாகும். இதுதான் என் பிரார்த்தனை. இந்த பிரார்த்தனையில் நீங்களும் என்னுடன் தயவு செய்து சேர்ந்து கொண்டு கடவுளே நம்முடைய தலைவர் என்றும் அவரே நமக்கு வெற்றியளிப்பவ ரென்றும் கூறும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆனால் நீங்கள் இந்த நோக்கத்திற்காக என் இந்த பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டு மென்றும், தாம் சுத்தமாக இல்லாதவர் பிறரைச் சுத்தமாக ஆகும்படி சொல்வது எப்படி என்றும், பயந்தவராயிருப்பவர் பிறர்க்கு தைரியம் ஊட்டுவது எப்படி யென்றும், ஆயுதம் தரித்த பாதுகாவலாளர்களுடன் செல்பவர் ஆயுதங்களை உபயோகியாமல் இருந்துவிட வேண்டு மென்று கூறுவது எப்படி என்றும் கேட்கலாம். இந்த கேள்விகளெல்லாம் சரியான கேள்விகளே. இந்தக் கேள்விகளைச் சிலர் என்னிடம் கேட்கவும் செய்கிறார்கள்.

என்னுடைய பதில் யாதெனில், நான் நடந்து போகும் பொழுது எனக்கு யாரிடமும் எள்ளளவும் துவேஷமும் கிடையாது என்று கிராம வாசிகளுக்கு உறுதி கூற விரும்புகிறேன் என்பதே யாகும். எனக்குத் துவேஷமில்லை என்பதை என்னை நம்பாதவர்களிடையே சென்று வாழ்வதின் மூலமாகவே நான் நிரூபித்துக் காட்ட முடியும்.

மூன்றாவது கேள்விக்குப் பதில் கூறுவது கொஞ்சம் கஷ்டம்தான் என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆயுதம் தரித்த பாதுகாவலுடன் தான் நான் சென்றுகொண் டிருக்கிறேன். ஆயுதம் தரித்த போலீஸாரும் ராணுவத்தாரும் எனக்கு எவ்வித தீங்கும் நேரா வண்ணம் கண்ணும் கருத்துமாக என்னுடன் வந்து கொண்டிருக்கிறார்கள். அது சர்க்கார் ஏற்பாடு. நான் ஒன்றும் செய்வதற்கில்லை. சர்க்கார் ஜனங்களுக்கு பொறுப்பு வாய்ந்தவர்கள். ஆதலால் என்னை போலீஸைக் கொண்டும் ராணுவத்தைக் கொண்டும் பாதுகாக்க வேண்டியது தங்கள் கடமை என்று கருதுகிறார்கள். அவர்கள் அப்படிச் செய்வதை நான் எப்படித் தடுக்க முடியும். என்னைப் பாதுகாப்பவர் கடவுளைத் தவிர வேறு யாருமே இல்லை என்று மட்டுமே நான் கூற முடியும். நான் கூறுவதை நம்புவீர்களோ நம்பமாட்டீர்களோ எனக்குத் தெரியாது. மனிதனுடைய ஹிருதயத்தை அறியக் கூடியவர் கடவுள் ஒருவர்தான். கடவுள் பக்தனுடைய கடமை மனச் சாக்ஷி கட்டளை இடுகிறபடி நடப்பதே யாகும். அந்த விதமாக நடப்பதாக நான் உங்களுக்கு உறுதி கூறுகிறேன்.

ஆனால் என்னுடன் சீக்கியர்கள் வரவேண்டிய காரணமென்ன என்று நீங்கள் கேட்கலாம். சர்க்கார் அவர்களை அனுப்ப வில்லை. ஆனால் என்னுடன் வருவதற்கு அவர்கள் சர்க்காருடைய அனுமதியைப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் சச்சரவுகளை உண்டாக்குவதற்காக இங்கே வரவில்லை. அது உண்மை என்பதற்கு அவர்கள் வழக்கமாகத் தரித்துக் கொள்ளும் உடைவாள் இல்லாமல் வந்திருப்பதே போதிய சான்றாகும். அவர்கள் இரண்டு சமூகத்தாருக்கும் பாரபக்ஷ மின்றி சேவை செய்வதற்காகவே வந்திருக்கிறார்கள். நேத்தாஜி தம்முடைய இந்திய தேசிய ராணுவத்தைச் சேர்ந்த போர் வீரர்களுக்குக் கற்பித்த முதற் பாடம் யாதெனில், ஹிந்துக்கள், முஸ்லிம்கள், கிருஸ்தவர்கள் பார்ஸிக்கள் முதலிய சகல மதத்தாரும் இந்தியாவைத் தங்கள் பொதுவான தாய் நாடாகக் கருத வேண்டு மென்பதும் எல்லோரும் ஒன்று சேர்ந்து தாய் நாட்டின் விடுதலைக்காக உழைப்பதின் மூலம் தங்கள் ஒற்றுமையை உலகத்தாருக்கு எடுத்துக் காட்ட வேண்டும் என்பதுமே யாகும். இங்கே வந்துள்ள சீக்கியர்கள் என்னுடைய யோசனைப்படி இரண்டு சமூகத்தாருக்கும் சேவை செய்ய விரும்புகிறார்கள். இத்தகைய நண்பர்களை நான் எந்தக் காரணத்தைக் கொண்டு வேண்டாமென்று அனுப்பிவிட முடியும். அவர்கள் உண்மையிலேயே எனக்கு நல்ல உதவி செய்து வருகிறார்கள். அதுவும் படாடோபமாகக் காட்டிக்கொள்வதற் கில்லாமல் உண்மையான சேவை யுணர்ச்சியுடனேயே செய்து வருகிறார்கள். அவர்களுடைய சேவையை வேண்டாமென்று மறுப்பேனேயானால் என் மனமே என்னை இழிவாக எண்ணவும் கோழையாக எண்ணவும் ஆரம்பித்துவிடும். ஆகையால் நீங்களும் என்னைப் போலவே அவர்களை உங்களுடைய சகோதரர்களாகக் கருதி அவர்களுடைய சேவையைப் பெற்றுக் கொள்ளவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். அவர்கள் அதிகமான உதவி செய்யக்கூடிய சக்தியுடையவர்களாகவும் இத்தகைய வேலையைச் செய்வதற்கு வேண்டிய அனுபவம் அதிகமாக உடையவர்களாகவும் இருக்கிறார்கள். கடவுள் அவர்களுக்கு உடலில் பலத்தையும் உள்ளத்தில் உறுதியையும் அருளி இருக்கிறார்.

நான் அவர்களைப்பற்றி கூறியது தவறென்று நான் கண்டால் அவர்களை உடனே அனுப்பிவிடுவேன். நான் கூறிய நோக்கத்திற்கு புறம்பான நோக்கத்துடன் நான் அவர்களை என்னுடன் வைத்துக்கொண்டிருப்பேனேயானால் நானே என்னுடைய அழிவைத் தேடிக்கொண்டவனாவேன். என்னுடைய சோதனையும் தோல்வியே அடையும்.

என்னுடைய பிரயாணத்தில் நான் உங்களுக்குச் செய்துகாட்ட விரும்பும் காரியங்கள் யாதெனில் எப்படி உங்களையும் கிராமத்து ஜலத்தையும் சுத்தமாக வைத்துக்கொள்வது என்பதும், மண்ணாலாகிய இந்த உடம்புக்கு எப்படி மண்ணைக்கொண்டு சிகிச்சை செய்வது என்பதும், நமக்கு மேலே எல்லையற்று நிற்கும்வானத்திலிருந்து எப்படிஜீவசக்தியைப்

பெறுவது என்பதும், நம்மை சுற்றியுள்ள காற்றிலிருந்து பிராணசக்தியை எப்படி அடைவது என்பதும், சூரிய வெளிச்சத்தை சரியான முறையில் எப்படி உபயோகிப்பது என்பதுமே யாகும். அதாவது நம்மைச் சூழ்ந்து நிற்கும் பஞ்ச பூதங்களையும் எப்படி உபயோகித்தால் தரித்திரமான நம்முடைய தேசம் தங்கம் கொழிக்கும் தேசமாக மாறுமென்பதை உங்களுக்குக் கற்றுக்கொடுக்க முயல்வேன். இவ்விதமாக உங்களுக்குச் சேவை செய்ய எனக்கு போதிய ஆற்றலை அருளுமாறு நான் எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

மோ. க. காந்தி.

## மற்றொரு அபாயம்

கிராமாந்திரங்களில் பாலானது ஏற்கனவே குறைவாகவே கிடைத்துக் கொண்டிருக்கிறது. நாம் உண்மையிலேயே ஜனங்களுடைய நன்மையை விரும்புவதாயிருந்தால் அதிகமான பால் கிடைக்கும்படி செய்வதற்கான வழிகளை கண்டுபிடிக்க வேண்டியது அவசியமாகும். நகரத்திலுள்ளவர்கள் தங்களுக்கு வேண்டிய பாலுக்கு கிராமங்களையே எதிர்பார்த்திருக்கிறார்கள். நகரத்திலுள்ளவர்கள் குறிப்பிட்ட கிராமங்களில் பால் பண்ணைகள் வைத்து தங்களுக்கு வேண்டியபாலை உற்பத்தி செய்துகொண்டால் அதுவே கிராமவாசிகளுடைய கஷ்டத்தை குறைப்பதற்கு ஏதுவாயிருக்கும். ஆனால் அது மட்டும் போதாது. அதிகமாக பால் கொடுக்கக்கூடிய பசுக்களை உற்பத்தி செய்து அதன் மூலம் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கான நீண்டகால திட்டத்தையும் ஏற்படுத்த வேண்டும். எங்கெங்கே ஜனங்கள் கஷ்டப்படுகிறார்களோ அங்கெல்லாம் அந்தக் கஷ்டத்தை உபயோகித்துத் தங்கள் நலனைத் தேடிக் கொள்ளும் சுய நலமிகள் எப்பொழுதும் காணப்படுகிறார்கள். போர்க்களத்தில் வீரர்கள் மடிந்தவுடன் அவர்களுடைய சட்டைப்பையிலுள்ள பணத்தை எடுத்துக்கொள்வதற்காக ஜனங்கள் ஓடுவதை அறிவோம். இப்பொழுது பால் குறைவாகக் கிடைப்பதை இந்தியத் தேயிலை வியாபார அபிவிருத்தி போர்டார் தங்களுடைய நலனுக்கு உபயோகிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அந்த போர்டுக்கு இந்தியாவில் தலைவராக உள்ள மிஸ்டர் மைல்ஸ் என்பவர் கிராமங்களில் தேனீர் குடிக்கும் பழக்கத்தை உண்டாக்க முயன்றுகொண்டிருக்கிறார். கிராமவாசிகள் தேனீர் குடித்தால் அவர்களுடைய வயிறு கெட்டுப்போகும். ஜீரணசக்தி குறைந்துபோகும். அதனால் பால் வேண்டுமென்று விரும்பமாட்டார்கள். இது கிராமங்களிலுள்ள இந்திய மக்களின் தேக ஆரோக்கியத்தைக் கெடுக்கும் உண்மையான அபாயமாகும். நம்முடைய நாட்டில் பெரும்பாலோர் சாகபக்ஷணிகள். ஆதலால் பாலிலிருந்து கிடைக்கக்கூடிய மிருக புரோடீன் என்னும் ஊன் சத்து தேக ஆரோக்கியத்துக்கு இன்றியமையாது வேண்டப்படுவதாகும். இந்த ஊன் சத்தை குறைக்கும் எந்த வழக்கமும் தீமைசெய்வதாகும்.

பத்திரிகைகளில் "உடம்பு பலத்துக்காக தேனீர் குடியுங்கள்" என்ற விளம்பரங்கள் காணப்படுகின்றன. இந்த விளம்பரங்களை ஓடவொட்டாமல் சர்க்கார் தடைசெய்ய வேண்டும். 1928-ம் வருஷத்தில் இந்தியாவில் சுமார் 5 கோடி ராத்தல் தேயிலை செலவாயிற்று. ஆனால் சென்ற வருஷத்தில் 13 கோடி ராத்தல் தேயிலை செலவாயிருக்கிறது. இப்படி ஏறக்குறைய மூன்று மடங்கு செலவாயிருந்தும் இவர்கள் இன்னும் அதிகமாக செலவாவதற்காக ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். பணக்காரர்கள் அளவுக்கு மிஞ்சி உணவு உண்ணுகிறார்கள். அவர்கள் தேயிலை விஷயத்தில் எப்படி நடந்துகொண்டாலும் கிராமவாசிகள் தேயிலை குடிப்பது என்பதை ஒருநாளும் ஆதரிக்கக் கூடாது. கிராமவாசிகள் இப்பொழுதே போதுமான போஷணையின்றி இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆதலால் இந்திய தேயிலை வியாபார அபிவிருத்தி போர்டார் செய்யும் வேலை கிராமவாசிகளுக்கு ஒரு பெரிய அபாயகரமான காரியமாகும். தேயிலை குடிக்கும் வழக்கம் ஏற்பட்டுவிட்டால் தேக வளர்ச்சியும் தேக பலமும் குன்றிப்போகும். பிறகு அதைச் சீர்ப்படுத்த முடியாது. ஆதலால் பொது ஜன சர்க்கார்கள் அதைத் தடுப்பதற்கான காரியங்களை எல்லாம் உடனே செய்வார்கள் என்று நம்புகிறோம்.

ஜே. ஸி. குமரப்பா.

## ஐ. ஸி. எஸ்.

இந்தியாவில் சுயராஜ்ய சர்க்கார் ஏற்பட்டவுடன் ஐ. ஸி. எஸ். உத்தியோக வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும் ஐ. பி. எஸ். உத்தியோக வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும் உத்தியோகத்தைவிட்டு விலகிக் கொள்ள விரும்பினால் அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று பிரிட்டிஷ் சர்க்கார் கூறுகிறார்கள். இந்த உத்தியோகஸ்தர்கள் தேசிய சர்க்காரிடம் சேவை செய்ய விரும்பாததிலிருந்தே இவர்கள் இந்தியாவின் உத்தியோகஸ்தர்கள் அல்லர் என்பதும் இந்தியாவை அடிமையாக வைத்திருப்பதற்கு பிரிட்டிஷார் உபயோகிக்கும் உத்தியோகஸ்தர்களே என்பதும் தெளிவாக விளங்குகின்றது. ஆதலால் ஆதிமுதல் இவர்களுக்கு பிரிட்டிஷ் கஜானாவிலிருந்தே சம்பளம் கொடுத்திருக்க வேண்டும். அப்படி இருக்க இப்பொழுது அவர்கள் தேசிய சர்க்காரிடம் வேலை செய்ய விரும்பாதபொழுது அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கவேண்டிய அவசியம் ஏது? நஷ்ட ஈடு கொடுப்பதானால் 20 கோடி ரூபாய் கொடுக்க வேண்டும். இதில் அதிகமாக வேதனை தரும் விஷயம் இந்த உத்தியோக வர்க்கத்தைச் சேர்ந்த இந்தியர்களும்கூட நஷ்ட ஈடு கேட்பது தான். இப்படி இந்தியர்களும் வேலையை விட்டு விலகி நஷ்ட ஈடு கேட்பதானால் இவர்களும் பிறந்த நாட்டைவிட்டு வெளியேறி பிரிட்டிஷ் நாட்டில் குடியேறப் போகிறார்களா?

அது எப்படியாயினும், இவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பது எதுபோல் இருக்கிறது என்றால் பிரிட்டிஷ் சர்க்கார் தங்களுக்காகப் போர் செய்யவும் இந்தியர்களை அடிமையாக வைத்திருக்கவும் தாங்கள் உபயோகித்து வரும் இந்தியப் போர் வீரர்களுக்கு இந்திய மக்கள் கொடுக்கும் பணத்தைக் கொண்டே வெகுமதி அளிப்பது போலவே இருக்கிறது.

நியாயப்படி நடப்பதானால் உத்தியோகத்தை விட்டு விலக விரும்புகிறவர்களுக்கு நஷ்ட ஈடு இந்திய கஜானாவிலிருந்து கொடுக்காமல் பிரிட்டிஷ் கஜானாவிலிருந்தே கொடுக்க வேண்டும். இதுபோலவே பிரிட்டிஷாருடைய சுதந்திரத்துக்காக போராடிய இந்தியப் போர் வீரர்களுக்கும் பிரிட்டிஷ் கஜானாவிலிருந்தே வெகுமதிகள் கொடுக்க வேண்டும். முதலாளிகள் தான் ஏஜண்டுகளுக்குச் சம்பளம் கொடுப்பது வழக்கம். இந்த உத்தியோகஸ்தர்களும் போர் வீரர்களும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஏஜண்டுகள். ஆதலால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தானே அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும்?

ஜே. ஸி. குமரப்பா

## வனஸ்பதி

குழந்தைகள் அழாமல் இருப்பதற்காக தாய்மார்கள் அவற்றின் வாயில் ஏதேனும் ஒரு வஸ்துவை வைத்து சுவைத்துக் கொண்டிருக்கும்படி செய்வார்கள். அந்த வஸ்து அந்தக் குழந்தைக்குப் போஷணை தராது உண்பது போன்ற உணர்ச்சியை மட்டுமே தரும்.

கொடுங் கோலனை எதிர்ப்பது கடவுளைப் பணிவதாகும்—பிராங்க்லின்.

அது போல் வனஸ்பதி என்னும் நெய்யை உபயோகிப்பவர்கள் நெய்யை உபயோகிப்பதாக எண்ணிக் கொள்ளுகிறார்கள். வனஸ்பதியில் நெய்யில் காணப்படும் நல்ல சத்துக்கள் எதுவும் கிடையாது. நெய்யை உபயோகிக்கிறோம் என்ற தவறான எண்ணத்தைத் தவிர அதனால் வேறு எவ்வித நன்மையும் ஏற்படுவதில்லை.

தாயார் குழந்தை வாயில் வைக்கும் வஸ்துவுக்காக அதனிடம் எதையும் கேட்பதில்லை. ஆனால் வனஸ்பதியை உற்பத்தி செய்கிறவர்கள் பெருத்த லாபம் அடைகிறார்கள். வனஸ்பதி நெய்யில் ஏ. வைடமின் என்னும் ஜீவசத்துவைச் சேர்த்தாலன்றி அது ஒரு நாளும் நெய்க்குச் சமமாகாது. ஜீரணமாகாத தாவர எண்ணெய்யே யாகும். தாவர எண்ணெயைத்தான் நெய் போல் கட்டியாக்குகிறார்கள். அப்படிச் செய்வதால் உண்டாகும் நன்மை யாதெனில் உண்மையான நெய்யோடு கலந்து ஏமாற்றுவதற்கு உதவியாயிருப்பது தான். வைடமின் ஏ. என்னும் ஜீவசத்துத் தாவர எண்ணெயில் கிடையாது. மிருக நெய்யில் தான் உண்டு. ஆதலால் சுறா மீன் நெய்யோ காட் மீன் நெய்யோ சேர்த்தால் தான் வனஸ்பதி வைடமின் உடையதாக ஆகும். நம்முடைய நாட்டின் ஜனங்களில் பெரும்பாலோர் பாலை உபயோகிப்பார்கள். மற்ற மாமிச உணவை உபயோகிக்க மாட்டார்கள். அப்படிப் பட்டவர்களுக்கு மீன் நெய் சேர்த்திருப்பதைச் சொல்லாமல் வனஸ்பதியை விற்றால் அது ஜனங்களை ஏமாற்றுவதே யாகும்.

அத்துடன் அமெரிக்காவில் நடந்த போஷணை மகா நாட்டில் வைடமின் நிறைந்த உணவுகளை அதிகமாக உபயோகித்தல் தீமை என்று நிபுணர்கள் கூறினார்கள். ஆதலால் மீன் எண்ணெய் கலந்த வனஸ்பதியைத் தாராளமாக உபயோகித்தால் தீமையே உண்டாகும்.

தாவர நெய்யை நெய் போல் கட்டியாகச் செய்வதற்கு நிக்கல் என்னும் உலோகத்தை உபயோகிக்க வேண்டியிருக்கிறது. அதில் கொஞ்சம் வனஸ்பதியில் தங்கிவிடுகிறது. நிக்கல் அணுவளவாக இருந்தாலும் நாளடைவில் விஷமாகவே ஆகிவிடுகின்றது.

சென்ற மாதம் நடந்த இந்திய விஞ்ஞான காங்கிரஸ் கூட்டத்தில் கூனூரிலுள்ள போஷணை ஆராய்ச்சி சாலையின் தலைவரான டாக்டர் பட்டவர்த்தன் என்பவர் வனஸ்பதியின் உபயோகத்தால் மிருகங்களின் வளர்ச்சியும் பிரஜாவிருத்தி சக்தியும் குறைந்து விடுவதாகக் கூறினார்.

நம்முடை நாட்டிலுள்ள ஜனங்கள் தேங்காய் எண்ணெய் நல்லெண்ணெய் போன்ற தாவார எண்ணெய்களை உபயோகித்து வருகிறார்கள். எண்ணெய்களெல்லாம் உடம்புக்கு ஒரேவிதமான நன்மையைச் செய்ய வில்லை என்று ஆயுர்வேத சாஸ்திரம் கூறுகின்றது. உதாரணமாக வாதம எண்ணெய் மூளைக்கு டானிக் என்றும் நிலக்கடலை எண்ணெய் மூளைக்குத் தீங்குசெய்யும் என்றும், தேங்காய் எண்ணெய்யும், நல்லெண்ணெய்யும் நிலக்கடலை எண்ணையவிட நல்லதென்றும் கூறப் பட்டிருக்கிறது. வனஸ்பதி உற்பத்தி செய்வோர் நிலக்கடலை எண்ணெய்யை யாவது பருத்திவிதை எண்ணெய்யை யாவது உபயோகிக்கிறார்கள். ஆகவே வனஸ்பதி உபயோகிக்கிறவர்கள் தாவர எண்ணெய்களிலும் தாழ்ந்த தினுசு எண்ணெய்களையே உபயோகிக்கிறார்கள. சர்க்கார் சுத்தமான உணவுப் பொருள்கள் கிடைக்கும்படி செய்வதற்காக சட்டமியற்ற விரும்புகிறார்கள். அப்படி யானால் வனஸ்பதி உற்பதி செய்கிறவர்கள் எந்த எண்ணெய்யைக் கொண்டு செய்கிறார்கள் என்பதையும் எதிலுள்ள வைடமினைச்சேர்க்கிறார்கள் என்பதையும் தெளிவாக எழுதி டப்பாவின் மேல் ஒட்டும்படியாகச் செய்ய வேண்டும்.

சோப்பு செய்வதற்காகவும் மற்ற கைத்தொழில் காரியங்களுக்காகவும் வனஸ்பதியை உற்பத்தி செய்தால் பாதகமில்லை. அதுவும் தவிர, செக்கில் ஆட்டும் எண்ணெய் வனஸ்பதியைவிட சுத்தத்திலும் ஜீரண சக்தியிலும் மேம்பட்டதாகும். வனஸ்பதியை உண்மையான நெய்யோடு ஒப்பிடவே முடியாது. அப்படியிருக்க நகரவாசிகள் நெய் சாப்பிடுகிறோம் என்று பெருமை பேசிக்கொள்ளும்படி செய்வதற்காக முதலாளிகள் லக்ஷக்கணக்கான பணத்தை செலவழித்து அயல் நாட்டிலிருந்து மிஷின்களைத் தருவித்துக்கொண்டிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் வனஸ்பதி உற்பத்தி செய்ய 27-புதிய மில்களை ஏற்படுத்துவதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். அவைகளில் பெரும்பாலானவை சென்னை மாகாணத்திலும் பம்பாய் மாகாணத்திலுமே ஏற்படப்போகின்றன. இது ஏழை ஜனங்களைக் கெடுத்துச் செல்வத்தில் கொழிக்கும் முதலாளிகளுக்கு உதவி செய்வதல்லவா? பிரிட்டிஷார் இந்தியாவை கொள்ளையடித்து வருவதற்கு இது உதவி செய்யுமல்லவா? 27-வனஸ்பதி மில்களை ஏற்படுத்த இங்கிலாந்திலிருந்து வரும் மெஷின்களுக்கு ஒரு கோடி ரூபாய்க்குமேல் போய்ச் சேருமல்லவா?

சர்க்கார் ஜனங்களின் நன்மையைத் தேட விரும்பினால் ஜனங்களுடைய ஆரோக்கியத்தைக் கெடுக்கும் இந்தக் காரியத்தை உடனே நிறுத்தவேண்டும். போஷணை இல்லாத இந்த நாட்டில் உடம்பைக் கெடுக்கும் இந்த மில் தொழிலை ஆதரிப்பது தேசத்தைப் பாழ்ப்படுத்துவதேயாகும். வனஸ்பதி நெய்யை உற்பத்தி செய்கிறவர்களைத் தேசத் துரோகிகள் என்று எண்ணும்படியாக பிரசாரம் செய்யவேண்டும். நெய் என்று சொல்லி ஜனங்களை ஏமாற்றும் இந்தக் கபட நாடகத்தைச் சர்க்கார் உடனே நிறுத்த வேண்டும்.

ஜே. ஸி. குமரப்பா.

## அஹிம்சையின் வெற்றி

காந்தியடிகள் ஜனவரி 20-ம் தேதி அட்டகோரா கிராமத்திலிருந்து சிரோந்தி என்னும் கிராமத்துக்குப்போய் சேர்ந்தார். அங்கே போய் சேர்ந்ததும் அவர் நேரே சேவாகிராமம் ஆசிரமத்தைச் சேர்ந்த திருமதி அம்துஸ் சலாம் என்னும் முஸ்லிம் பெண்மணி படுத்திருந்த வீட்டுக்குச் சென்றார்.

திருமதி அம்துஸ் சலாம் பம்பாயிலுள்ள ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் வெகு காலமாக காந்தியடிகளுடன் இருந்து வருகிறார். அவரைப் பற்றி காந்தியடிகள், அட்டகோராவில் கூறியதாவது :—

"அவர் ஒரு உண்மையான முஸ்லிம். குர்ஆன் வேதபுத்தகம் எப்பொழுதும் அவரிடம் இருக்கும். அவர் தினந்தோறும் குர்ஆனை வெகு நேரம் படித்துக்கொண்டிருப்பார். அவர் ரம்சானைக் கொண்டாட ஒரு பொழுதும் தவறியதில்லை. அவர் கீதையையும் படிப்பார். இவ்வளவு தெய்வ பக்தியுடைய சிறந்த இப்பெண்மணி ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக எமலோகம் செல்லும் பாதையில் துணிவுடன் இறங்கி இருக்கிறார். அவருடைய முயற்சி வெற்றிபெற வேண்டுமென்று விரும்புகிறேன்"

காந்தியடிகளுடைய பரிவாரத்தார் ஒவ்வொருவரும் தனித்தனியாக கிராமங்களிலிருந்து கொண்டு ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை ஏற்படுத்த முயன்று வருவதை நேயர்கள் அறிவார்கள். திருமதி அம்துஸ் சலாமும் அவர்களில் ஒருவராவார்.

அவர் சிரோந்தி கிராமத்திலிருந்து கொண்டு வேலை செய்தார். அந்த கிராமத்தில் ஹிந்து ஒருவருடைய வீட்டில் கடவுள் பிரார்த்தனைக்காக உபயோகப்படுத்தப்பட்ட ஒரு புனிதமான வாளை அக்டோபர் மாதம் அட்டூழியம் நடந்த சமயத்தில் அக்கிரமி ஒருவன் எடுத்துக்கொண்டு போய் அநேகரை வெட்டிக் கொன்று விட்டான். அந்த வாளை திரும்பக் கொண்டு வந்து தர வேண்டுமென்று திருமதி அம்துஸ் சலாம் உண்ணாவிரதமிருக்க ஆரம்பித்தார். அந்தக் கிராமத்திலுள்ள முஸ்லிம்கள் அந்த அக்கிரமியைக் காணோம் என்றும் அவன் போன இடம் தெரியவில்லை என்றும் அந்த வாளும் இருக்கிறதோ இல்லையோ தெரியவில்லை என்றும் கூறினார்கள்.

அதன் மேல் திருமதி அம்துஸ் ஸலாமைக் கவனித்து வந்த டாக்டர் சுசீலா நய்யார் "வாள் கிடையாமல் போனால் போகட்டும். முஸ்லிம்கள் உண்மையாக பச்சாதாபப்பட்டால் போதும்" என்று கூறினார்.

காந்தியடிகள் திருமதி அம்துஸ் சலாமிடம் சென்றபொழுது அவர் பேச முடியவில்லை. பலஹீனமாயிருந்தார். உண்ணாவிரதமிருக்க ஆரம்பித்து 25 நாட்கள் ஆயிருந்தன. அவருடைய நிலைமையைப்பற்றி டாக்டர் சுசீலா நய்யார் "மூன்று நாட்களாக அவரால் போதுமான ஜலம் குடிக்க முடியவில்லை. அவருடைய நிலைமை கவலை தந்து கொண்டிருக்கிறது. ஜீவநாடி தளர்ந்துகொண்டே இருந்தபோதிலும் அவர் சந்தோஷமாகவும் தைரியமாகவும் இருக்கிறார். தினந்தோறும் குர்ஆனையும் கீதையையும் வாசிக்கச் சொல்லுகிறார். தம்மைப் பரிபூர்ணமாக சர்வேசுவரனிடம் ஒப்புவித்து விட்டார்" என்று கூறினார்.

காந்தியடிகளுக்கு ஒவ்வொரு திங்கட்கிழமையும் மௌனதினம். ஆனால் திங்கட்கிழமை யன்று திருமதி அம்துஸ் சலாமைச் சந்திக்கும்பொழுது அவருடன் பேசுவதற்காக தம்முடைய மௌன விரதத்தை ஞாயிற்றுக்கிழமை மத்தியானமே மேற்கொண்டிருந்தார். ஆயினும் திங்கட்கிழமை காலையிலேயே அவரிடம் போய் விட்டபடியால் காந்தியடிகள் அவருடைய தலையில் கையை வைத்துக்கொண்டு பேசாமல் மிகுந்த கவலையுடன் அவர் பக்கத்தில் உட்கார்ந்திருந்தார்.

அந்த ஊரிலுள்ள முஸ்லிம் தலைவர்கள் இதைப்பற்றியே சில தினங்களாக சிந்தித்துக் கொண்டிருந்தார்கள். காந்தியடிகள் அந்த ஊருக்குப் போய் சேர்ந்ததும் அவர்கள் தங்கள் அபிப்பிராயத்தை கூறுவதற்காக அவரை பிற்பகல் வந்து பார்க்க விரும்புவதாக சொல்லி அனுப்பினார்கள். அப்படியே பிற்பகல் வந்து பார்த்தார்கள். அவர்களுக்கும் காந்தியடிகளுக்கு மிடையே இரவு ஒன்பது மணி வரை சம்பாஷணை நடைபெற்றது. அப்பொழுது காந்தியடிகள் கூறியதாவது:—

"நாங்கள் திருட்டுப்போன வாளை திரும்பப் பெற வேண்டும் என்று மட்டும் விரும்பவில்லை. சிறுபான்மை வகுப்பார் தங்கள் மதத்தை அனுஷ்டிக்கவும் தங்கள் வழக்கம்போல் தங்கள் கடவுள் வழிபாட்டைச் செய்யவும் தங்கள் வாழ்க்கையை நடத்தவும் சுதந்திரமுடையவர்களாக இருக்க வேண்டுமென்றே நாங்கள் கேட்கிறோம். எல்லா மதத்தாரும் சகிப்புத்தன்மையுடன் நடந்துகொள்ள வேண்டும் என்பதை வற்புறுத்திக் கூறுகின்றேன். வங்காளத்தில் பெரும்பான்மையோராக உள்ள முஸ்லிம்கள் சிறுபான்மையோராக உள்ள ஹிந்துக்களைத் தவறாக நடத்தினால் ஜின்னா சாயபு கேட்கும் பாகிஸ்தான் கோரிக்கைக்கு அஸ்திவாரம் இல்லாமலே போய்விடும். பெரும்பான்மையோராக உள்ளவர்கள் சிறுபான்மையோராக உள்ளவர்களுடைய உயிரையும் பொருளையும் மதத்தையும் பாதுகாத்துக் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை சிறுபான்மையோராக உள்ளவர்களுக்கு ஏற்படும்படி செய்வதே பாகிஸ்தான் ஏற்படுத்துவதற்கு முதல் முதலாகச் செய்ய வேண்டிய காரியமாகும். சிறு பான்மையோரை சகிப்புத்தன்மையின்றி நடத்தும் படியாக பாகிஸ்தான் கோரிக்கையும் சொல்ல வில்லை. இஸ்லாம் மதமும் சொல்லவில்லை. இஸ்லாம் மதத்தைக் கீர்த்தி மிகுந்த அதன் உன்னத பீடத்தினின்று சிலர் கீழே இழுத்துத் தள்ளிவிட்டார்கள். அதை மறுபடியும் அதன் உன்னத பீடத்தில் ஏற்றிவைப்பதே என்னுடைய நோக்கமும் திருமதி அம்துஸ் சலாமின் உண்ணாவிரதத்தின் நோக்கமும் ஆகும். திருமதி அம்துஸ்சலாம் கேட்பதின் சாரம் யாதெனில் ஹிந்துக்கள் மதானுஷ்டானங்களை எந்த விதத்திலும் தடைசெய்வதில்லை என்று முஸ்லிம்கள் உறுதிமொழி கொடுக்கவேண்டும் என்பதேயாகும். இந்த உறுதிமொழியைக் கொடுத்தால் இனிமேல் கொலை கொள்ளை முதலியன எதுவும் நடைபெறமாட்டா என்று அர்த்தமாகும்."

இதைக் கேட்டதும் வந்திருந்த முஸ்லிம்களின் தலைவரான மௌல்வி அன்வருல்லா சாகிப் காந்தியடிகளுடைய கருத்தை ஏற்றுக்கொண்டு உறுதிமொழி அளிக்கத் தயாராயிருப்பதாகச் சொன்னார்.

அதன்மேல் காந்தியடிகள் மறுபடியும் நிலைமையை விளக்கி கூறியதாவது :—

"நீங்கள் உறுதிமொழி கூறுமுன், இந்த விஷயத்தைப் பற்றி அதிக கவனத்துடன் ஆராயவேண்டும். யார் உறுதிமொழி கொடுத்தாலும் அதை நான் சாதாரணமாக எண்ணி விடுவதில்லை. எந்தச் சமயத்திலும் கட்டுப்படுத்தக் கூடிய உறுதிமொழியாகவே எண்ணுவேன். யாரேனும் உறுதிமொழி கொடுத்துவிட்டு அதை மீறி நடந்தால் நான் உண்ணாவிரதமிருப்பேன். ஆதலால் நீங்கள் நன்றாக சிந்தித்துப் பார்த்தே உறுதி மொழி கொடுக்கவேண்டும்."

முஸ்லிம் தலைவர்கள் மௌனமாக இருந்து, காந்தியடிகள் கூறுவதைக் கேட்டார்கள். காந்தியடிகளின் அபிப்பிராத்தை ஒப்புக் கொள்வதாகக் கூறினார்கள். அப்படியானால் நீங்கள் உங்கள் உறுதிமொழியை காகிதத்தில் எழுதி கையெழுத்திட்டுத் தரவேணு மென்று காந்தியடிகள் கேட்டார்.

முஸ்லிம் தலைவர்கள் தனியாக உட்கார்ந்து சிறிது நேரம் யோசனை செய்தார்கள். அதன் பின் காந்தியடிகள் தயாரித்திருந்த உறுதிமொழியில் கையெழுத்திட்டார்கள். அந்த உறுதிமொழியின் சாரமாவது:—

"சிறு பான்மை வகுப்பாருக்கு மதசுதந்திரம் பரிபூரணமாக அளிக்கப் படுகிறது. இந்தப் பகுதியில் முன்போல் எவ்வித அட்டூழியங்களும் நடைபெறாமல் பார்த்துக் கொள்வதாக உறுதிகூறப் படுகிறது. இந்த உறுதி மொழிப்படி நடக்கா விட்டால் காந்தியடிகள் உண்ணாவிரத மிருப்பார்."

காந்தியடிகள் உண்ணாவிரத மிருப்பார், என்ற அக்ஷரத்தைக் கண்டதும் முஸ்லிம் தலைவர்கள் கையெழுத்திட தயங்கினார்கள். ஆனால் காந்தியடிகள் அந்த நிபந்தனையில்லா விட்டால் அவர்களுடைய உறுதி மொழிக்கு அர்த்தமே கிடையாது என்று கூறினார். அது விஷயத்தை அவர்களுக்கு நன்றாக விளக்கிச் சொன்னார். அதன் பின்னர் முஸ்லிம் தலைவர்கள் அந்த நிபந்தனை இருப்பதற்கு ஒத்துக் கொண்டு கையெழுத் திட்டார்கள்.

இந்த உறுதிமொழி சிரோந்தி, ராஜாராம்பூர், சக்தோலா, மத்யபாரா என்ற கிராமங்களைக் கட்டுப் படுத்தும். பதினேழு முஸ்லிம்கள் கையெழுத்திட்டிருக்கிறார்கள். மௌல்வி அன்வருல்லா ஸாகிப் முன்கூட்டி தம் கிராமத்துக்குப் போய் விட்டபடியால் அவருடைய கையெழுத்து பின்னால் வாங்கப்படும்.

அப்பொழுது அட்டூழியங்கள் அதிகமாக நடந்த பகதூர் என்னும் கிராமமும் உறுதி மொழியில் சேர்த்துக் கொள்ளப்படும்.

இவ்விதம் முஸ்லிம் தலைவர்கள் உறுதி மொழியில் கையெழுத்திட்டபின் காந்தியடிகள் கீழ்கண்டவாறு கூறினர் :—

" இந்தியாவில் பல வகுப்பாருடைய உறவு சம்பந்தமான சரிதையில் இந்தச் சம்பவம் ஒரு புதிய அத்தியாயமாகும். நான்கு கிராமங்களில் பல்வேறு வகுப்புகளிடையிலே பரிபூர்ணமான ஒற்றுமை ஏற்படுமானல் அது முதலில் நோவகாளி ஜில்லாவிலும் பிறகு வங்காளத்திலும் அதன் பின் இந்தியா முழுவதிலும் பரவும்."

அதன் பின் காந்தியடிகள், அங்கு வந்திருந்தவர்கள் அனைவருக்கும் மிட்டாய்கள் வழங்கினர்.

## குஷ்டரோகத்தைப் பற்றி டாக்டர்களுடைய அறிக்கை

வேலூரிலுள்ள குஷ்டரோக ஆஸ்பத்திரியின் கௌரவ டாக்டர் ஆர். ஜி. காக்ரேன் இந்த ரோக விஷயத்தில் மிகுந்த திறமையுடைய நிபுணர். ஆயினும் இந்தியா முழுவதிலுமுள்ள பெரிய டாக்டர்கள் கையெழுத்திட்டு ஒரு அறிக்கையைத் தயாரிக்க வேண்டுமென்று காந்தியடிகள் டாக்டர் காக்ரேனை வேண்டிக்கொண்டார். அப்படியே அறிக்கையில் டாக்டர் ஜீவராஜ் மேத்தா, டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன், இந்தியாவிலுள்ள ஐந்து வைத்திய கல்லூரிகளின் தலைமை ஆசிரியர்கள், மருந்து சம்பந்தமான சாஸ்திரத்தில் நிபுணர்களான ஐந்து ஆசிரியர்கள் உள்பட 27 பிரபல டாக்டர்கள் கையெழுத்திட்டிருக்கிறார்கள்.

அறிக்கையானது டாக்டர்களை உத்தேசித்து எழுதப்பட்டதல்ல. ஜனங்களுக்காகவே தயாரிக்கப்பட்டது. ஜனங்கள் அறிக்கையைப் படித்து பயன்பெறவேண்டும். டாக்டர் காக்ரேனுக்கு நம்முடைய நன்றி உரியதாகும்.

அறிக்கை வருமாறு :—

"சென்ற இருபத்தைந்து வருஷ காலமாக வைத்தியர்கள் செய்த ஆராய்ச்சியின் பயனாக சில விஷயங்கள் முடிவு செய்யப்பட்டிருக்கின்றன. குஷ்டரோகம் சுலபமாக ஒருவரிடமிருந்து ஒருவருக்குப் போகும் வியாதியன்று. இந்தியாவிலுள்ள பல குஷ்டரோகிகள் பொது ஜனங்களுக்கு அபாயம் விளைவிக்கக் கூடிய நிலைமையில் உள்ளவர்கள் அல்லர். அவர்களிடமிருந்து வியாதி பரவ முடியாது. பரவக்கூடிய நிலைமையிலுள்ள குஷ்டரோகிகளும்கூட ஆரோக்கியமானவர்களிடம் அதிலும் முக்கியமாக குழந்தைகளிடம் நெருங்காமல் இருப்பார்களானல் நோய் பரவ ஏது இல்லை. பழங்கால நம்பிக்கைகள் நாட்டில் பரவி இருப்பதால் வைத்தியர்கள்கூட குஷ்டரோகத்தைச் சாதாரண வியாதியாக எண்ணாமல் இருக்கிறார்கள். குஷ்டரோகத்தை பரவாமல் தடுக்க வேண்டுமானல் கீழ்க் கண்ட விஷயங்களை எல்லோருக்கும் தெரியும்படி வற்புறுத்திச் சொல்ல வேண்டும்.

1) குஷ்டரோகம் ஒரு சாதாரணமான வியாதிதான். கடவுள் கோபத்தால் உண்டாவதில்லை.

2) க்ஷயரோகம், டைபாயிட் போன்ற வியாதிகள் வந்தால் எப்படி இழிவில்லையோ அப்படி குஷ்டரோகம் வந்தாலும் இழிவில்லை.

3) குஷ்டரோகம் தகப்பனிடமிருந்து மக்களுக்கு பரவும் வியாதி யன்று. நெருங்கிப் பழகுவதால் ஒரு குடும்பத்தில் பலருக்கு உண்டாகலாம்.

4) குஷ்டரோகம் பெண் வியாதியால் உண்டாவதில்லை.

5) இந்தியாவிலுள்ள குஷ்டரோகிகளுடைய வியாதி பரவக்கூடிய நிலைமையில் உள்ளதல்ல. அவர்களை எவ்வித தடையுமின்றி எல்லா இடங்களுக்கும் போகும்படி அனுமதிக்கலாம்.

6) குஷ்ட ரோகத்துக்கு பரவக் கூடிய சக்தி குறைவு. ஆனல் குழந்தைகளிடம் சீக்கிரத்தில் தொத்திக் கொள்ளும்.

7) குஷ்டரோகிகளுக்கு ஆசிரமம் ஏற்படுத்த வேண்டியதில்லை. அவர்களுக்கு வேண்டியதெல்லாம் அன்பும் சிகிச்சையும் தான். அவர்களை குணப்படுத்தி உபயோகமுள்ள பிரஜைகளாகச் செய்ய வேண்டும்.

8) குஷ்ட ரோகத்தைச் சாதாரணமான ஏற்பாடுகளால் தடுத்து விடலாம். குஷ்ட ரோகிகளை பிரித்து வைக்க வேண்டிய அவசிய மில்லை.

9) பிச்சைக்காரர்களாக உள்ள குஷ்ட ரோகிகளை கவனிப்பதால் மட்டும் குஷ்டரோக பிரச்சினையைத் தீர்த்து விட முடியாது.

10) குஷ்டரோகமுள்ள பிச்சைக்காரர்களை மற்ற பிச்சைக் காரர்கள் போலவே நடத்த வேண்டும்.

11) குஷ்ட ரோகம் இந்தியாவில் சில பாகங்களிலேயே அதிகமாகக் காணப்படுகின்றது. குஷ்டரோகத்தை தடுக்க பெரிய ஏற்பாடுகளைச்செய்வதற்கு முன்னல் எந்த இடங்களில் அதிகமாக இருக்கிறது என்பதைப்பற்றிய தகவல்களைச் சேகரிக்கவேண்டும்.

12) குஷ்ட ரோகத்தைத் தடுக்கும் இயக்கத்துக்கு அறிவோடு உதவி செய்வதற்காக வைத்தியர்களுக்கும் மற்றவர்களுக்கும் அதை பற்றிய விஷயங்களைக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

13) பொது ஜனங்கள் கீழ்கண்ட விதமாக நடந்து கொள்வார்களானல் இந்தியாவில் குஷ்ட ரோகத்தை இல்லாமல் செய்து விடமுடியும் :—

(அ) ஒரு வீட்டில் குஷ்ட ரோகத்தைக் கண்டால் உடனே பயந்து விடக் கூடாது.

(ஆ) பரவக் கூடிய நிலைமையிலுள்ள வியாதியாயிருந்தால் கீழ்க்கண்ட ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

(1) குஷ்ட ரோகிகள் குழந்தைகளுடன் உறங்கக் கூடாது.

(2) குஷ்டரோகிகள் தங்கள் படுக்கை பாத்திரங்கள் முதலியவைகளை தனியாக வைத்துக்கொள்ள வேண்டும். குஷ்டரோகிகள் ஆரோக்கியமானவர்களிடத்திலும் குழந்தைகளிடத்திலும் நெருங்கக் கூடாது.

(இ) ஒரு குடும்பத்தில் குஷ்டரோகம் தோன்றுமானல் உடனே வைத்திய நிபுணருடைய யோசனையை பெறவேண்டும். ஆரம்பத்திலேயே சரியானபடி சிகிச்சை செய்தால் அங்கஹீன மில்லாமல் குணமாகிவிடும்.

இன்னும் பல கேள்விகள் எழுகின்றன. குஷ்டரோகத்தை குணப்படுத்த முடியுமா என்று பலர் கேட்கிறார்கள். குஷ்ட ரோகத்தில் பலவகையுண்டு. சில வகைகளை உடம்பானது தானே எதிர்த்துவிரட்டிவிடும். சில வகைகளில் அங்க ஹீனம் ஏற்படாது. சிலவற்றில் மட்டுமே ஏற்படும். சில வகைகளுக்கு மட்டும் இன்னும் மருந்து கண்டு பிடிக்கப் படவில்லை. ஆனல் அவைகள் மிகச் சிலவே யாகும்.

ஆயிரக்கணக்கான வருஷங்களாக கஷ்டப்படுத்தி வரும் இந்த நோயை இல்லாமல் செய்வதற்கு பணமும் நேரமும் சக்தியும் செலவு செய்ய வேண்டியது அவசியமாகும். குஷ்டரோகத்தை அடக்குவதற்கு சுருக்கவழி கிடையாது. அதிகமாக ஆராய்ச்சி செய்யவேண்டும். டாக்டர்களும் தலைவர்களும் பொது ஜனங்களும் நம் நாட்டிலிருந்து குஷ்டரோகத்தை ஒழிப்பதற்காக உத்ஸாகம் காட்ட வேண்டும்.

அச்சிட்டவர்: ப. அருணாசலம், கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 40, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி., சென்னை.
பிரசுரித்தவர்: சின்ன அண்ணாமலை, தமிழ்ப்பண்ணை, 6/2 நாகேஸ்வரராவ் ரோடு தியாகராயநகர், சென்னை 17.
ஆசிரியர்கள்: பொ. திருகூட சுந்தரம்; நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை